RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 286 | அக்டோபர்.17 2025 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5



## புதிய விண்ணப்பதாரர்களுக்கு டிச.15 முதல் மகளிர் உரிமைத்தொகை சட்டப் பேரவையில் உதயநிதி

சென்னை, அக்.17-

புதிதாக விண்ணப்பித்தவர்களுக்கு டிசம்பர் 15ம் தேதி முதல் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்படும் என சட்டப் பேரவையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் மகளிர் உரிமைத் தொகை தொடர்பாக உரையாற்றினார். அப்போது பேசிய அவர், “தமிழகம் மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த இந்தியாவும் திரும்பிப் பார்க்கும் வகையில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை முதல்வர் ஸ்டாலின் அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார். கடந்த 2023ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் தேதி அண்ணாவின் பிறந்தநாள் அன்று மகளிர் உரிமைத் தொகை திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மகளிரின் பொருளாதார விடுதலைக்கு வழிவகுக்கும் இந்த திட்டத்தின் மூலம் ஒவ்வொரு மாதமும் சுமார் ஒரு கோடியே 14 லட்சம் மகளிருக்கு இந்த உரிமைத் தொகையை, முதல்வர் வழங்கி வருகிறார். இதுவரை ரூ.30,000 கோடி உரிமைத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், கடந்த 26 மாதங்களாக, 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் துவங்கி, இந்த ஆண்டு வரை, இன்றைக்கு 16 ஆம் தேதி ஏற்கெனவே ஆயிரம் ரூபாய் கொடுத்தாகிவிட்டது.

தமிழ்நாட்டு மகளிருக்கு, இதுவரை கிட்டத்தட்ட ஒரு கோடியே 14 லட்சம் மகளிர் ஒவ்வொருவருக்கும், சுமார் 26 ஆயிரம் ரூபாயை நம்முடைய அரசு கொடுத்துள்ளது.

இந்த திட்டத்தில் மேலும் சில மகளிரும் பயன்பெற வேண்டும் என்பதற்காக, சில விதிகளில் முதல்வர் ஸ்டாலின் தளர்த்தி அறிவித்தார். அரசு மானியத்தில் நான்கு சக்கர வாகனம் வைத்திருப்பவர்கள் குடும்பங்கள் உள்ளிட்ட சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

தற்போது, தமிழகத்தில் நடத்தப்பட்டு வரும் உங்களுடன் ஸ்டாலின் முகாம்களில் பங்கேற்று, மகளிர் உரிமைத் தொகை பெற புதிதாக 28 லட்சம் பெண்கள் விண்ணப்பித்திருக்கிறார்கள். உங்களுடன் ஸ்டாலின் முகாம்கள் நவம்பர் 14, 2025 அன்று முடிவடைய உள்ளன. இதற்கிடையே, புதிதாக உரிமைத் தொகை கோரி பெறப்பட்டுள்ள விண்ணப்பங்கள் வருவாய்த் துறைமூலம் Field Inspection செய்யப்பட்டு வருகின்றன.

இவர்களது விண்ணப்பங்கள் வருவாய்த் துறை மூலம் ஆய்வு செய்து நவம்பர் 30க்குள் நிறைவு பெற்று, தகுதியான மகளிருக்கு வரும் டிசம்பர் 15 ஆம் தேதி முதல் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் வழங்கப்படும் என முதல்வர் ஸ்டாலின் முடிவெடுத்துள்ளார்” என தெரிவித்தார்.

# கச்சத்தீவு, மீனவர் பிரச்சினை குறித்து இலங்கை பிரதமரிடம் பேச வேண்டும்

## மோடிக்கு ஸ்டாலின் கடிதம்!

சென்னை: அக்.17-

இலங்கையிடமிருந்து கச்சத் தீவை மீட்கவும், இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்கவும், கூட்டுப்பணிக் குழுவை மீண்டும் புதுப்பிக்கவும் இந்தியா வந்துள்ள இலங்கை பிரதமரிடம் வலியுறுத்த வேண்டி பிரதமர் மோடிக்கு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இது தொடர்பாக அரசின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், ‘இலங்கையிடமிருந்து கச்சத் தீவை மீட்கவும், இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்கவும், கூட்டுப்பணிக் குழுவை மீண்டும் புதுப்பிக்கவும். இந்தியா வந்துள்ள இலங்கை பிரதமரை வலியுறுத்திட வேண்டி பிரதமர் மோடிக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், இலங்கை பிரதமரின் மூன்று நாள் புது டெல்லிப் பயணம் அக்டோபர் 16-18, 2025 அன்று திட்டமிடப்பட்டுள்ளதை குறிப்பிட்டுள்ள முதல்வர், இந்தப் பயணம், பாக் விரிகுடாவின் பாரம்பரிய மீன்பிடி கடல் பகுதியில் இந்திய மீனவர்கள் எதிர்கொள்ளும் தொடர்ச்சியான பிரச்சினைகளை தீர்க்க ஒரு சிறந்த வாய்ப்பை வழங்கியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை கடற்படையினரால் தொடர்ந்து நடைபெறும் தாக்குதல்கள், துன்புறுத்தல்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் காரணமாக தமிழக மீனவ சமூகங்கள் தொடர்ந்து துன்பங்களை எதிர்கொள்கின்றனர் என்று குறிப்பிட்டுள்ள முதல்வர், 2021 முதல், 106 வெவ்வேறு



சம்பவங்களில் 1,482 மீனவர்களும் 198 மீன்பிடிப் படகுகளும் சிறைப் பிடிக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் மீனவர்கள் பெரும் துயரத்தையும் பொருளாதார இழப்பையும் எதிர்கொண்டுள்ளதாகவும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பிரச்சினைகளைத் தூதரக நடவடிக்கைகள் மூலம் தீர்க்க இந்திய அரசின் தலையீட்டை தமிழ்நாடு அரசு தொடர்ந்து கோரி வருவதாகவும், இதற்காக, தான் பதினொரு முறை பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளதையும், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்கு 72 முறை கடிதம் எழுதியுள்ளதையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தச் சிறைப்பிடிப்பு மற்றும் தாக்குதல் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதால், இந்த கீழ்கண்ட முக்கியமான பிரச்சினைகள் குறித்து இலங்கைப் பிரதமரின் வருகையின் போது விவாதிக்கப்பட வேண்டும் என்று தனது கடிதத்தில் முதல்வர் கேட்டுக் கொண்டுள்ளார்.

தமிழ்நாட்டு மீனவர்கள் பாரம்பரியமாக இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்த கச்சத்தீவைச் சுற்றியுள்ள கடல் பகுதியில் மீன்பிடித்து வருகின்றனர். இந்தத் தீவு ஒன்றிய அரசால் மாநில அரசின் முறையான ஒப்புதலைப் பெறாமல் இலங்கைக்கு மாற்றப்பட்டது

இந்த முடிவை 1974 முதல் தமிழ்நாடு சட்டமன்றம் தொடர்ந்து எதிர்த்து வருகிறது. இதன் விளைவாக, நமது மீனவர்கள் இப்போது தங்கள் பாரம்பரிய மீன்பிடித் தளங்களுக்குள் செல்வதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதுடன், அத்துமீறி நுழைவதாகக் கூறி அடிக்கடி துன்புறுத்தப்படுகின்றனர்.

இந்தச் சூழ்நிலையில், கச்சத்தீவை மீட்பதற்கும், பாக் விரிகுடா பகுதியில் உள்ள நமது மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை மீட்டெடுப்பதற்கும், இந்தியாவிற்கு வருகை தரும் இலங்கை பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்திட இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும், மீனவ சமூகம் எதிர்கொள்ளும் நீண்டகால மற்றும் துயரமான பிரச்சினைகளைத் தீர்க்க இது மிகவும் முக்கியமானதுமாகும் என்று தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது, தமிழ்நாட்டைச் சேர்ந்த 76 மீனவர்களும் 242 மீன்பிடி படகுகளும் இலங்கை வசம் உள்ள நிலையில், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் எதிர்கொள்ளும் துயரத்தைத் தணிக்க, அவர்களை விரைவாகத் தாயகம் திரும்பவும், அவர்களின் படகுகளை இலங்கை அரசிடமிருந்து விடுவிக்கவும் உரிய அழுத்தம் கொடுக்க வேண்டுமென்றும் தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்திய மீனவர்கள் தங்கள் மீன்பிடி உபகரணங்கள் இலங்கை கடற்படையினரால் பறிமுதல் செய்யப்படுவதையும், இலங்கை நாட்டினரால் அடிக்கடி நடத்தப்படும் தாக்குதல்கள் மற்றும் திருட்டுச் சம்பவங்கள் குறித்தும் புகார் அளிப்பதாகவும், இந்தப் பிரச்சினையை திறம்பட தீர்க்க மேம்படுத்தப்பட்ட இருதரப்பு பாதுகாப்பு ஒருங்கிணைப்பு மற்றும் நிலையான தூதரக நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம் என்றும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மீன்பிடிச் சட்டத்தில் 2018 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட திருத்தம், பறிமுதல் செய்யப்பட்ட இந்திய மீன்பிடிப் படகுகளை தேசியமயமாக்க வழிவகுத்துள்ளால் அவற்றை மீட்டெடுப்பது சாத்தியமற்றதாகிவிட்டது. இது பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு கடுமையான நிதி நெருக்கடியையும் வாழ்வாதார இழப்பையும் ஏற்படுத்தியுள்ளது என்றும் மீனவர்களின் வாழ்வாதாரம் நிரந்தரமாக பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்ய இந்தப் பிரச்சினையை இலங்கை பிரதமரிடம் வலியுறுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேற்குறிப்பிட்டுள்ள இருதரப்பு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக நிறுவப்பட்ட மீன்வளத்திற்கான கூட்டுப் பணிக்குழு, சமீபத்திய ஆண்டுகளில் தொடர்ந்து கூட்டப்படுவதில்லை. எனவே, இரு நாடுகளைச் சேர்ந்த மீனவர்களின் கவலைகளை, நிலையான மற்றும் ஒருங்கிணைந்த முறையில் நிவர்த்தி செய்வதற்கான ஒரு கட்டமைக்கப்பட்ட தளத்தை உருவாக்க இந்த வழிமுறையை மீண்டும் புதுப்பிப்பது அவசியமாகும் என்றும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பிரச்சினைகளினால் ஏற்படும் மனித மற்றும் பொருளாதார பாதிப்புகளைக் கருத்தில் கொண்டு, தொடர்ச்சியான தூதரக நடவடிக்கைகள் மூலம் விரைவான மற்றும் நீடித்தத் தீர்வை அடையும் நோக்கில், இவற்றை இலங்கை பிரதமரிடம் எடுத்துச் சென்று விவாதிக்க வேண்டும் என்று இந்திய பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தமிழக முதல்வர் கேட்டுக் கொண்டுள்ளார்’ எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## வளமும், வாய்ப்பும் அனைவருக்கும் பொதுவாக இருக்க வேண்டும்: தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி கருத்து

காரைக்குடி, அக்.17-

வளமும், வாய்ப்புகளும் அனைவருக்கும் பொதுவாக இருக்க வேண்டும் என்று ஆளுநர் ஆர்.என்.ரவி கூறினார். காரைக்குடி அழகப்பா பல்கலை.யில் பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா இருக்கை சார்பில் ‘வளர்ச்சியடைந்த இந்தியாஸ்ரீ2047, நல்லாட்சியும் நிலையான வளர்ச்சிக்கு வழிகாட்டும் ஒருங்கிணைந்த மனிதநேயமும்’ என்ற தலைப்பில் 2 நாள் தேசியக் கருத்தரங்கு நேற்று தொடங்கியது. துணைவேந்தர் க.ரவி வரவேற்றார்.

கருத்தரங்கைத் தொடங்கி வைத்து ஆளுநர் ஆர்.என்.ரவி பேசியதாவது: இளைஞர்கள் பெரிய கனவுகளைக் காணவும், தேசக் கட்டமைப்பில் பங்காற்றவும் அப்துல் கலாம் ஊக்கமளித்தார். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் வரி வசூலிக்கும் கருவிகளாகவும், மக்களை அச்சுறுத்தும் சாதனங்களாகவும் மாவட்ட நிர்வாகம், காவல் துறை இருந்தன. தற்போது அந்நிலை மாறியுள்ளது. நமது ரிஷிகள், முனிவர்கள், கவிஞர்கள் தங்கள் ஞானத்தால் தலைமுறைக்கு ஏற்றபடி சூழலை மாற்றி அமைத்தனர்.

நாட்டில் 70 லட்சம் பழங்குடியினர் உள்ளனர். அவர்களில் 12 லட்சம் பேர் தமிழகத்தில் உள்ளனர். அவர்களுக்கு பலனளிக்கும் திட்டங்களைச் செயல்படுத்தியவர் பிரதமர் மோடி. உணவு உள்ளிட்ட பல்வேறு வகைகளில் வேறுபட்டாலும் தீன்தயாள் உபாத்யாயா தத்துவத்தின்படி நாம் அனைவரும் ஒரே குடும்பம்.

உலகின் 4வது பெரிய பொருளாதார நாடாக இந்தியா மாறியதற்கு ஒருங்கிணைந்த மனிதநேயமே காரணம். அதுவே, வெளியுறவுக் கொள்கையிலும் உள்ளது. வளமும், வாய்ப்புகளும் அனைவருக்கும் பொதுவாக இருக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். டெல்லியில் உள்ள இந்திய கலாச்சார மையத் தலைவர் வினய் பி.சஹஸ்ரபுத்தே, காந்திகிராம நிகர்நிலை பல்கலை.

துணைவேந்தர் பஞ்சநதம் ஆகியோர் பேசினர். பதிவாளர் செந்தில்ராஜன் நன்றி கூறினார். முன்னதாக, அப்துல் கலாம் பிறந்தநாளையொட்டி பல்கலை. வளாகத்தில் உள்ள அவரது சிலைக்கு ஆளுநர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். ஆளுநருக்கு மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, காவல் கண்காணிப்பாளர் சிவபிரசாத் ஆகியோர் பூங்கொத்து கொடுத்து வரவேற்றனர்.



## ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் வாங்க மாட்டோம் என மோடி எனக்கு உறுதியளித்துள்ளார்: ட்ரம்ப்

வாஷிங்டன், அக்.17-

ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் வாங்குவதை இந்தியா நிறுத்தும் என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தன்னிடம் கூறியதாக அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் பேசிய ட்ரம்ப், “ரஷ்யாவிடம் இந்தியா எண்ணெய் வாங்குவதில் நான் மகிழ்ச்சியடையவில்லை. அவர்கள் ரஷ்யாவிலிருந்து எண்ணெய் வாங்க மாட்டார்கள் என்று மோடி எனக்கு உறுதியளித்தார். உங்களுக்குத் தெரியும், இதை உடனடியாக செய்ய முடியாது. இது ஒரு சிறிய செயல்முறை, ஆனால் செயல்முறை விரைவில் முடிவடையும். ரஷ்யாவை பொருளாதார ரீதியாக தனிமைப்படுத்த இது ஒரு பெரிய படி. இப்போது சீனாவையும் அதையே செய்ய வைக்கப் போகிறோம். மோடி ஒரு சிறந்த மனிதர். அவர் ட்ரம்பை நேசிக்கிறார். நான் அவரது அரசியல் வாழ்க்கையை அழிக்க விரும்பவில்லை. நான் பல ஆண்டுகளாக இந்தியாவைப் பார்த்து வருகிறேன். அது ஒரு நம்பமுடியாத நாடு, ஒவ்வொரு ஆண்டும் உங்களுக்கு ஒரு புதிய தலைவர் அங்கு இருப்பார். ஆனால், என் நண்பர் மோடி நீண்ட காலமாக அங்கு தலைவராக இருக்கிறார்” என்றார்

பிரதமர் மோடி அமெரிக்க அதிபர் ட்ரம்ப்புக்கு இத்தகைய உறுதியை அளித்தாரா என்பது குறித்த மின்னஞ்சல் கேள்விகளுக்கு வாஷிங்டனில் உள்ள இந்திய தூதரகம் உடனடியாக பதிலளிக்கவில்லை.

## தவெக நிர்வாகிகளுக்கு காவல் நீட்டிப்பு இல்லை: இருவரையும் விடுவித்து நீதிபதி உத்தரவு



கரூர், அக்.17-

கரூரில் தவெக பிரச்சாரக் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக, தவெக கரூர் மேற்கு மாவட்டச் செயலாளர் வி.பி.மதியழகன், நிர்வாகி பவுன்ராஜ் ஆகியோர் செப். 29ம் தேதி கைது செய்யப்பட்டு, திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

பின்னர், கரூர் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் பவுன்ராஜ் தாக்கல் செய்த ஜாமீன் மனு அக். 8ம் தேதி தள்ளுபடியானது. தொடர்ந்து, அதே நீதிமன்றத்தில் மதியழகன் தாக்கல் செய்த ஜாமீன் மனு கடந்த 13ம் தேதி மீண்டும் விசாரணைக்கு வந்த போது, வழக்கு சிபிஐக்கு மாற்றப்பட்டு உள்ளதால் விசாரணையை மறுதேதி குறிப்பிடாமல் நீதிபதி இளவழகன் தள்ளிவைத்தார்.

இந்நிலையில், மதியழகன், பவுன்ராஜ் ஆகியோரின் நீதிமன்றக் காவல் நேற்று முன்தினம் முடிவடைந்த நிலையில், குற்றவியல் நடுவர் நீதிமன்ற விசாரணைக்கு இருவரையும் திருச்சி மத்திய சிறையில் இருந்து வீடியோ கான்பரன்ஸில் சிறப்பு புலனாய்வுக் குழுவினர் ஆஜர் படுத்தினர்.

அப்போது, மேலும் 15 நாள் நீதிமன்றக் காவலை நீட்டிப்பு செய்யுமாறு சிறப்புக் குழு சார்பில் கோரிக்கை விடுக்கப் பட்டது. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த தவெக வழக்கறிஞர்கள், “வழக்கு விசாரணை சிபிஐக்கு மாற்றப்பட்டுள்ளதால் குற்றம் சாட்டப்பட்டவர்களின் கருத்தை நேரில் கேட்டபிறகே காவல் நீட்டிப்பு குறித்து முடிவு செய்ய வேண்டும்” என வாதிட்டனர்.

வழக்கு சிபிஐக்கு...

இதையடுத்து, மாஜிஸ்திரேட் பரத்குமார் உத்தரவின்பேரில் இருவரும் நேற்று குற்றவியல் நடுவர் நீதிமன்றம் 1ல் ஆஜர்படுத்தப்பட்டனர். அப்போது, “வழக்கு சிபிஐக்கு மாற்றப்பட்டுள்ளதால் நீதிமன்ற காவல் நீட்டிப்பு கேட்க முடியாது, இருவரையும் விடுவிக்க வேண்டும்” என தவெக வழக்கறிஞர் சீனிவாசன் வாதிட்டார். இருவருக்கும் காவல் நீட்டிப்பு கேட்கவில்லை.

விசாரணையை சிபிஐ நீதிமன்றத்துக்கு மாற்ற வேண்டும் என அரசு தரப்பில் கோரிக்கை விடுக்கப் பட்டது. இதையடுத்து, மதியழகன், பவுன்ராஜ் ஆகியோருக்கு காவல் நீட்டிப்பு வழங்க மாஜிஸ்ட்ரேட் பரத்குமார் மறுப்புத் தெரிவித்து, இருவரையும் விடுவித்தார். இதையடுத்து, இருவரும் திருச்சி மத்திய சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு பிரமாண பத்திரம் வழங்கிய பிறகு இருவரும் சிறையில் இருந்து விடுவிக்கப் படுவார்கள் என்று கூறப் படுகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட சிறப்பு மருத்துவ முகாம்

# வருகின்ற 18.10.2025 அன்று சிங்கம்புணரி வட்டம், குளோபல் இண்டர்நேஷனல் பள்ளியில் நடைபெறவுள்ளது

## மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, அக.17-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 2.8.2025 அன்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில், "நலம் காக்கும் ஸ்டாலின்" எனும் புதிய திட்டத்தினை தொடங்கி வைத்துள்ளார்கள்.

இத்திட்டத்தின் வாயிலாக தமிழகம் முழுவதும் சுமார் 1,256 உயர்தர மருத்துவ மையங்கள் மூலம் 17 சிறப்பு மருத்துவ துறைகள் வாயிலாக கட்டணமில்லா மருத்துவ சேவைகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, சிவகங்கை மாவட்டத்தில், வாரத்திற்கு ஒரு முகாம் வீதம் மொத்தம் 39 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், வருகின்ற 18.10.2025 ஆம் தேதியன்று சிங்கம்புணரி வட்டம், மு.கோவில்பட்டி, குளோபல் இண்டர்நேஷனல் பள்ளியில் (CBSE) "நலம் காக்கும் ஸ்டாலின்" சிறப்பு மருத்துவ முகாமானது நடைபெறவுள்ளது.

இம்மருத்துவ முகாமில், ரூபாய் 3 ஆயிரம் மதிப்பீட்டிலான இரத்த பரிசோதனை, இ.சி.ஜி உள்ளிட்ட பல்வேறு மருத்துவ பரிசோதனைகள் அனைத்தும், பொதுமக்களுக்கு இலவசமாக மேற்கொள்ளப்படவுள்ளது.

மேலும், கண் மருத்துவம், காது, மூக்கு, தொண்டை மருத்துவம், பல் மருத்துவம், எலும்பு மருத்துவம், நரம்பியல் மருத்துவம், மனநல மருத்துவம், சர்க்கரை நோய் மருத்துவம், நுரையீரல் நோய் மருத்துவம், பொது மருத்துவம், இருதய மருத்துவம், குழந்தைகள் நல மருத்துவம், தோல் மருத்துவம், சித்த மருத்துவம், இயன்முறை மருத்துவம், அறுவை சிகிச்சை மருத்துவம், மகப்பேறு மருத்துவம் உள்ளிட்ட 17 வகையான சிறப்பு மருத்துவ நிபுனர்களை கொண்டு, சிறப்பான மருத்துவ சேவைகளும் இம்முகாமின் வாயிலாக வழங்கப்படவுள்ளது.

மருத்துவர்களால் பரிந்துரைக்கப்படுவர்களுக்கு எக்கோ பரிசோதனை (Echocardiogram), எக்ஸ்ரே (X-Ray), அலட்ராசவுண்ட ஸ்கேன் (USG), பெண்களுக்கான கர்ப்பப்பை வாய் மற்றும் மார்பக புற்றுநோய் பரிசோதனைகளும் இம்முகாம்களிலேயே மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ள ப்பட்டுள்ளது. மேலும், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சிறப்பு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, தாய் சேய் நல ஊட்டசச்சத்து பெட்டகங்களும் வழங்கப்படவுள்ளது. அதுமட்டுமன்றி, இம்முகாம்களின் வாயிலாக, முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டு அட்டை மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான மருத்துவ சான்றிதழ்களும் வழங்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறிப்பாக, முகாமிற்கு வருகைபுரியும் பொது மக்கள் தங்களின் ஆதார் அட்டையின் நகலினை கொண்டு வருதல் அவசிய மாகும். மேலும், இம்முகாமில் காப்பீடு அட்டை வேண்டி விண்ணப்பிப்பவர்கள், குடும்ப அட்டை (Smart Card), ஆதார் அட்டை மற்றும் கிராம நிர்வாக அலுவலரிடம் தங்களது ஆண்டு வருமானம் ரூபாய் 1.20 இலட்சத்துக்கு குறைவாக உள்ளதற்கான சான்று ஆகியவைகளை கொண்டு வருதல் வேண்டும்.

இதுபோன்று, உயிர் காக்கும் தரமான மருத்துவ சேவையினை பொதுமக்களுக்கு வழங்குவதற்கென மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால்" நலம் காக்கும் ஸ்டாலின்" திட்டமானது, செயல்படுத்தப்பட்டுள்ளது.

இதனை பொதுமக்கள் கருத்தில் கொண்டு, தங்களது பகுதிகளில் நடைபெறவுள்ள "நலம் காக்கும் ஸ்டாலின்" மருத்துவ முகாமினை பயன்படுத்திக் கொண்டு, தங்களது உடல்நலத்தினை முறையாக பேணிக்காத்து பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

# தீபாவளி இனிப்பு மற்றும் கார வகைகளின் தயாரிப்பாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் உணவு பாதுகாப்பு (ம) தர நிர்ணய விதிமுறைகளை பின்பற்ற வேண்டும்

## மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தெரிவித்துள்ளார்

கடலூர், அக்.17-

தீபாவளி பண்டிகையின்போது பொதுமக்கள் அதிக அளவு இனிப்பு மற்றும் கார வகைகள் வாங்கி உண்பதுடன் மற்றவர்களுக்கும் வாங்கி வழங்குவது வழக்கமாகும். எனவே, இனிப்பு மற்றும் கார வகைகளின் தயாரிப்பாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் உணவு பாதுகாப்பு (ம) தர நிர்ணயச் சட்டத்தின்படி உரிமம் அல்லது பதிவு சான்று கட்டாயம் பெற்றிருக்க வேண்டும். இனிப்பு மற்றும் காரம் வகைகளை தரமான மூலப் பொருட்களைக் கொண்டு தயாரிக்க வேண்டும். தயாரிப்பு இடங்கள் சுகாதாரமாக பராமரிக்க வேண்டும். தயாரிப்பிற்கு சுத்தமான தண்ணீர் மட்டுமே பயன்படுத்த வேண்டும். ஒரு முறை பயன்படுத்திய எண்ணெய் எக்காரணத்தைக் கொண்டும் மீண்டும் பயன்படுத்தக் கூடாது. அதிக அளவு செயற்கை நிறமிகள் சேர்ப்பதை தவிர்க்க வேண்டும். ஈக்கள், பூச்சிகள் மற்றும் கிருமி தொற்று இல்லாத வகையில் பலகாரங்களை தூசிபடாத வகையில் வெள்ளை பேப்பர் அல்லது பட்டர் பேப்பர் கொண்டு மூடி வைத்து சுகாதாரமான முறையில் விற்பனை செய்ய வேண்டும். பலகாரங்களை மூடி வைக்க எக்காரணத்தைக் கொண்டும் அச்சிடப்பட்ட காகிதங்களை பயன்படுத்தக்கூடாது.

உணவு கையாளும் பணியாளர்கள் தலைமுடி வலை, கையுறை, மேலங்கி, தூய்மையான உடைகள் அணிந்திருப்பதுடன், நகங்களை வெட்டி சுத்தம் பேண வேண்டும். பணியைத் தொடங்கும் முன்பும், கழிவறையை பயன்படுத்திய பிறகும் சோப்பு கொண்டு கைகளை சுத்தம் செய்ய வேண்டும். தொற்று நோயால் பாதிக்கப்பட்டவரை பணிபுரிய அனுமதிக்கக்கூடாது. பணியின்போது வெற்றிலை, புகையிலை, புகைப்பிடித்தல், எச்சில் துப்புதல் ஆகியவற்றை கட்டாயம் தவிர்க்க வேண்டும்.

இனிப்பு மற்றும் கார வகைகள் தயாரித்து பேக்கிங் செய்து விற்பனை செய்யும் பொட்டலங்களில் தயாரிப்பாளர் முகவரி, தயாரிப்பு தேதி, காலாவதி தேதி, தொகுதி எண் (Batch No.), FSSAI உரிமம்/பதிவு எண் ஆகியவை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.

மேற்கண்ட உணவு பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்றாத உணவு வணிகர்கள் மீது சட்டப்படியான நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படும். பொதுமக்கள் சுகாதாரமான முறையில் மற்றும் தரமான உணவு பொருட்களை கொண்டு தயாரிக்கப்பட்ட உணவு பொருட்களை மட்டுமே வாங்கி பயன்படுத்த வேண்டும். உணவு பொருள் தொடர்பான புகார்கள் இருந்தால் 94440 42322 என்ற வாட்ஸ்அப் எண்ணிற்கு புகார் அளிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது. மேலும், புகார் அளிப்பவரின் விவரங்கள் பாதுகாக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தெரிவித்துள்ளார்.



■ சிவகங்கை மாவட்டம், டாக்டர் ஏபிஜே.அப்துல் கலாம் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு தேசிய மாணவர்கள் தினத்தையொட்டி, மன்னர் துரைசிங்கம் அரசு கலைக்கல்லூரியில் , Mount Litera Zee Sr. Sec., School D HEARTFULNESS INSTITUTE ஆகியவைகள் இணைந்து நடத்திய ஜோதி ஓட்டம் மற்றும் கொடி ஓட்டம் நிகழ்ச்சியினை இன்றையதினம் (15.10.2025) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் சிவகங்கை துணை காவல் கண்காணிப்பாளர் திரு.அமல அட்வின் மற்றும் மன்னர் துரைசிங்கம் அரசு கலைக்கல்லூரியில் , Mount Litera Zee Sr. Sec., School மற்றும் HEARTFULNESS INSTITUTE ஆகியவைகளைச் சார்ந்த முதல்வர் மற்றும் நிர்வாகிகள் ஆகியோர் உள்ளனர்.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டம் சார்பில்

# போஷன் மா (தேசிய ஊட்டச்சத்து மாதம்) மற்றும் உலக உணவு தினத்தை முன்னிட்டு ஆரோக்கிய உணவு திருவிழாவை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் துவக்கி வைத்தார்

மதுரை, அக்.17-

மதுரை மாவட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டம் சார்பில் போஷன் மா (தேசிய ஊட்டச்சத்து மாதம்) மற்றும் உலக உணவு தினத்தை முன்னிட்டு ஆரோக்கிய உணவு திருவிழாவை துவக்கி வைத்து அமைக்கப்பட்டுள்ள அரங்குகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., பார்வையிட்டு பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார் .

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட பணிகள் துறையின் சார்பாக ஒவ்வொரு வருடமும் போஷான் அபியான் திட்டத்தின் கீழ் செப்டம்பர் மாதத்தினை தேசிய ஊட்டச்சத்து மாதமாக கடைபிடித்து கொண்டாடி வருகின்றோம். இந்த ஆண்டு இந்த தேசிய ஊட்டச்சத்து விழாவானது செப்டம்பர் 17 முதல் அக்டோபர் 16 வரை கொண்டாட திட்டமிடப்பட்டு நாளது தேதி வரை சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டு வருகிறது. அதற்கு மேலும் அக்டோபர் 16 ஆன இன்று உலக உணவு தினமாகவும் அமைந்துள்ளது. இந்த விழாவின் முக்கிய நோக்கமானது ஊட்டச்சத்தின் முக்கியத்துவத்தினை அனைத்து மக்களிடமும் விழிப்புணர்வினை ஏற்படுத்தி அதன் மூலம் ஊட்டச்சத்து குறைபாடு உடைய குழந்தைகளின் எண்ணிக்கையை குறைப்பதே முக்கிய நோக்கமாக கொண்டுள்ளது. இதன் பொருட்டு மதுரை மாவட்டத்தில் உள்ள 17 வட்டாரங்களிலும் மொத்தமாக உள்ள 2001 அங்கன்வாடி மையங்களிலும் இந்த ஊட்டச்சத்து மாத விழாவானது சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகின்றது. மதுரை மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட துறையின் சார்பாக ஊட்டச்சத்து மிக்க உணவுகளை கொண்டாடும் விதமாகவும் சத்தான சிறுதானியங்களையும் காய்கறி மற்றும் பல வகைகளையும் மையப்படுத்தி குழந்தைகள் விரும்பும் விதமாகவும் தாய்மார்கள் எளிய முறையில் தயார் செய்யக்கூடிய முறையாகவும் அங்கன்வாடி பணியாளர்கள் மத்தியில் சமையல் போட்டியானது நடைபெற்று காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இதில் 40 குழுக்களாக 120 அங்கன்வாடி பணியாளர்கள் பங்கேற்பாளர்களாக பங்கேற்று சமையல் போட்டியில் உணவினை சமைத்துள்ளனர். மேலும் ஆட்சியர் அலுவலகத்திற்கு வரும் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாகவும் ஊட்டச்சத்துணை பற்றிய வண்ண விழிப்புணர்வு கோலங்களும் போடப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இக்கோலப்போட்டியில் 10 குழுக்களாக 30 பணியாளர்கள் பங்கேற்றுள்ளனர்.

மாவட்ட அளவிலான ஆரோக்கிய உணவு திருவிழாவில் 150 பணியாளர்கள் பங்கேற்று 100க்கும் மேற்பட்ட சத்தான உணவு வகைகளை காட்சிப்படுத்தி உள்ளனர்.

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.ஜே. பிரவீன் குமார்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது,

ஆண்டுதோறும் செப்டம்பர் மாதம் போஷன் மா என்ற பெயரில் நாம் இவ்விழாவை கொண்டாடுகிறோம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரை மற்றும் வழிகாட்டுதலின் படி கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து கிடைக்கும் வகையில் ஏற்படுத்தப்பட்ட சிறப்பான நிகழ்ச்சி ஆகும். இந்நிகழ்ச்சியில் ஒவ்வொரு வட்டாரத்திலும் வேலை செய்யக்கூடிய அங்கன்வாடி பெண் ஊழியர்கள் மற்றும் அலுவலர்கள் சிறப்பான முறையில் கலந்து கொண்டுள்ளார்கள். சிறுவர்களுக்கு ஆரோக்கியமான முறையில் ஊட்டச்சத்து நிறைந்த உணவு கிடைத்திடும் வகையில் பல்வேறு வகையான உணவுகளை தயாரித்துள்ளார்கள். பெண் அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் சிறப்பான முறையில் கம்பு, திணை, ராகி போன்ற சிறு தானியங்களில் கேக், பிஸ்கட் போன்ற ஊட்டச்சத்து நிறைந்த உணவுகளை தயாரித்துள்ளார்கள். மேலும், வாழை இலை, வாழைத்தண்டு, முருங்கை இலை போன்றவற்றிலும் மற்றும் தமிழ்நாடு அரசு சார்பில் வழங்கப்படும் ஊட்டச்சத்து மாவில் கொழுக்கட்டை மட்டுமல்லாமல் குலாப் ஜாமூன், கேக் போன்ற சுவையான பொருட்களையும் தயாரித்து உள்ளார்கள். கர்ப்பிணிப் பெண்கள் மட்டுமல்லாமல் அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஒரு சிறப்பான முயற்சி முன்னெடுத்துள்ளோம்.

மேலும் உலக உணவு தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பல்வேறு வகையான விழிப்புணர்வு கோலங்கள் மற்றும் ஓவியங்கள் வரைந்து சிறப்பித்துள்ளார்கள் என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக தேசிய ஊட்டச்சத்து மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட சமையல் மற்றும் ரங்கோலி போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டபணிகள் திட்ட அலுவலர் திருமதி.ஷீலா சுந்தரி அவர்கள், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.காந்திமதி அவர்கள் உள்ளிட்ட அங்கன்வாடி பணியாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# எனக்கு புதிய பொறுப்பு வழங்கிய மாநில மாவட்ட நிர்வாகிகளுக்கு நன்றி தெரிவித்து கொள்கிறேன்



தாம்பரம், அக்.17-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் நகரத்தில் பாரதிய ஜனதா கட்சியில் வார்டு பொறுப்பாளராக, நகர செயலாளராக, நகர பொது செயலாளராக,மண்டல தலைவராக, மாவட்ட செயலாளராக, மண்டல பார்வையாளாரக பல்வேறு பதவிகள் அளித்து என்ன கட்சி பணியாற்றிட ஊக்குவித்த மாநில மாவட்ட பாஜக நிர்வாகிகளுக்கு நன்றி.இப்போது செங்கல்பட்டு மாவட்டம் தமிழ்நாடு பாரதிய ஜனதா கட்சியின் செங்கல்பட்டு வடக்கு மாவட்ட எிஙிசி அணியின் மாவட்ட தலைவராக வி.குருநாதன் ஆகிய என்னை அறிவித்து கட்சி பணிகளை ஆற்றிட வாய்ப்புகள் அளித்த மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் ஜி அவர்களுக்கும், எிஙிசி அணியின் மாநில தலைவர் திரு. வீர திருநாவுக்கரசு ஜி அவர்களுக்கும், மாவட்டத்தலைவர் அண்ணன் திரு. சிங்கை ந.ரகுராமன் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன் மற்றும் எனக்கு துணையாக இருந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்கிறேன்.




■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் சமூக நலன் மற்றும் உரிமைத்துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டம் சார்பில் போ'ன் மாதேசிய ஊட்டசத்து மாதம்) கீழ் உலக உணவு தினம், ஆரோக்கிய உணவு திருவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட சமையல் மற்றும் ரங்கோலி போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன்குமார் )பரிசு மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்.

# 18.10.2025 அன்று நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவ மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெறவுள்ள நலம் காக்கும் ஸ்டாலின் முகாம் முன்னேற்பாடு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர். அழகுமீனா, நேரில் பார்வையிட்டு ஆய்வு



கன்னியாகுமரி, அக்.17-

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவ மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் 18.10.2025 அன்று நடைபெறவுள்ள நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு முகாம் முன்னேற்பாடு பணிகளை இன்று (16.10.2025) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப, அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்

தமிழ்நாட்டை நோயில்லாத மாநிலமாக மாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு முகாமினை தமிழ்நாடு முழுவதும் 02.08.2025 அன்று சென்னையிலிருந்து காணொலி காட்சி வாயிலாக துவக்கி வைத்தார்கள்.

இம்முகாமில் சிறந்த மருத்துவர்களை வைத்து சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் கண்டிப்பாக தங்களது முழு உடலை பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்களில் மருத்துவ பரிசோதனை மேற்கொண்டு, அட்டை பெற்ற நபர்களுக்கு, இம்முகாமில் சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் முகாமில் ஆண்கள், பெண்கள், கர்ப்பிணிகள் (மகப்பேறு) என மூன்றாக பிரிக்கப்பட்டு அவர்களுக்கு சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம்முகாமில் பொது மருத்துவம், பொது அறுவை சிகிட்சை, எலும்பு முறிவு மருத்துவம், பேறுகால மருத்துவம், குழந்தை நல மருத்துவம், இதயநல சிறப்பு மருத்துவம், நரம்பியல் சிறப்பு மருத்துவம், நுரையீரல் சிறப்பு மருத்துவம், நீரிழிவு நோய்கான சிறப்பு மருத்துவம், தோல் சிறப்பு மருத்துவம், பல் மருத்துவம், கண் சிறப்பு மருத்துவம், காது மூக்கு தொண்டை மருத்துவம், மனநல மருத்துவம், இயன்முறை மருத்துவம், இயற்கை மருத்துவம், உணவியல் ஆலோசணை உள்ளிட்ட ஆகிய 17 சிறப்பு மருத்துவ சிகிட்சை, சிறப்பு மருத்துவ நிபுணர்களால் வழங்கப்பட உள்ளது. தொடர்ந்து முதல்வரின் விரிவான காப்பீடு திட்ட அட்டை மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட உள்ளது.

அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் 10 முகாம்கள் நடைபெற்றுள்ளது. அதனைத்தொடர்ந்து இரண்டாம் கட்டமாக வரும் (சனிக்கிழமை) 18.10.2025 அன்று நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட கட்டையன் விளை, கேசவதிருப்ப புரம், பள்ளிவிளை, வாத்தியார்விளை, கிருஷ்ணன் கோவில், சி.பி.எச் ரோடு, மேல கலுங்கடி, வடசேரி, கணியான் குளம், அருந்தியார் தெரு, காமராஜபுரம், புதுக்குடியிருப்பு, கிறிஸ்து நகர், வாட்டர் டாங்ரோடு, கோர்டு ரோடு உள்ளிட்ட வார்டுகளுக்குட்பட்ட பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவ மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெறவுள்ளது. எனவே பொதுமக்கள் அனைவரும் தங்கள் பகுதிக்கு அருகாமையில் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும் நலம் காக்கும் ஸ்டாலின் ரூ முழு உடல் பரிசோதனை முகாமில் கலந்துகொண்டு பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

நடைபெற்ற ஆய்வில் மாவட்ட சுகாதார அலுவலர் மரு.அரவிந்த் ஜோதி, மாநகர் நகர்நல அலுவலர் மரு.ஆல்பர் மதியரசு, மாநகராட்சி செயற்பொறியாளர், துறை அலுவலர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.



■ மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக வருகை தந்துள்ளதை முன்னிட்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி.இ.ஆ.ப., அவர்கள் மலர்கொத்து வழங்கி வரவேற்றார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ரா.சிவ பிரசாத்,இ.கா.ப., அவர்கள், தேவகோட்டை சார் ஆட்சியர் திரு.ஆயுஷ் வெங்கட் வட்ஸ்,இ.ஆ.ப., அவர்கள், அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் மதிப்புறு கர்னல் பேரா.க.இரவி அவர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.



## திருப்பத்தூர் ஒன்றியத்திற்குட்பட்ட அம்மாபட்டி ஊராட்சியில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் புகைப்படக் கண்காட்சி நடைபெற்றது

சிவகங்கை, அக்.17-

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அம்மாபட்டி ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் புகைப்படக் கண்காட்சி நடைபெற்றது. இப்புகைப்படக் கண்காட்சியில் தமிழக அரசின் சாதனைகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கிய புகைப்படங்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாக்களில் நலத்திட்ட உதவிகள் வழங்கிய புகைப்படங்கள் இடம் பெற்றன.

மேலும், இக்கண்காட்சியில் அரசு திட்டங்கள் குறித்தும், நலத்திட்டங்களை எவ்வாறு பெறுவது, யாரை அணுகி பெறவேண்டும் என்பது குறித்தும் பொதுமக்களுக்கு அலுவலர்களால் விரிவாக விளக்கம் அளிக்கப்பட்டது.

புகைப்படக் கண்காட்சியை பார்வையிட்ட பொதுமக்கள் தமிழக அரசு செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து தெரிந்து கொள்ளவும், நலத்திட்ட உதவிகளை யாரை அணுகிப் பெறவேண்டும் என்பது குறித்து அறிந்து கொள்வதற்கும் வசதியாக இப்புகைப்படக் கண்காட்சி பெரிதும் உதவியாக இருந்தது என பொதுமக்கள் வாயிலாக தெரிவிக்கப்பட்டது.

இதுபோன்று, பொதுமக்களுக்கு பயனுள்ள வகையில் அரசின் சார்பில் நடத்தப்படும் தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியினை பார்த்து, அரசின் திட்டங்கள் குறித்து அறிந்து கொண்டு பயன்பெறவேண்டும்.

## கூட்டுறவு சங்க பணியாளர்களுக்கு 20 சதவீத தீபாவளி போனஸ்: தமிழக அரசு ஆணை

சென்னை, அக்.17(

தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 2024 2025 ஆண்டுக்கான மிகை ஊதியம் (போனஸ்) மற்றும் கருணைத் தொகை (Ex-gratia) 2025 2026ல் வழங்க தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், "போனஸ் சட்டத்தின் கீழ் வரும் கூட்டுறவு சங்கங்களில் ஒதுக்கப்படக் கூடிய உபரித் தொகையை கணக்கில் கொண்டு அச்சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 20 விழுக்காடு வரை மிகை ஊதியம் (போனஸ்) வழங்கப்படும். உபரி தொகை இல்லாமல் உள்ள சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்கள் தீபாவளி பண்டிகையினை சிறப்பாக கொண்டாடுவதற்கு ஏதுவாக 10 விழுக்காடு மிகை ஊதியம் (போனஸ்) மற்றும் கருணைத் தொகை வழங்கப்படும்.

குறைந்த எண்ணிக்கையிலான பணியாளர்கள் பணிபுரிந்து போனஸ் சட்டத்தின் கீழ் வராத நிகர லாபம் ஈட்டும் சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 20 விழுக்காடு வரை மிகை ஊதியம் (போனஸ்) மற்றும் கருணைத் தொகை வழங்கப்படும்.

போனஸ் சட்டத்தின் கீழ் வராத நிகர லாபம் ஈட்டாத தலைமைச் சங்கங்கள் மற்றும் மத்திய சங்கங்களாக இருப்பின் அவற்றில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ரூ.3,000ம், தொடக்க சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ரூ.2,400ம் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு கருணைத் தொகையாக வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

இதன்படி, தமிழ்நாடு முழுவதும் உள்ள கூட்டுறவு சங்கங்களில் பணிபுரியும் 44,081 பணியாளர்களுக்கு ரூ.44 கோடியே 11 லட்சம் மிகை ஊதியம் (போனஸ்) மற்றும் கருணைத் தொகை வழங்கப்படவுள்ளது.

அரசின் இந்த நடவடிக்கை கூட்டுறவு நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்கள் மிகவும் ஆர்வத்துடனும், ஈடுபாட்டுடனும், ஊக்கத்துடனும் பணியாற்றுவதையும் எதிர்வரும் தீபாவளி பண்டிகையை மகிழ்ச்சியுடன் கொண்டாடவதையும் உறுதி செய்திட வழிவகை செய்யும்" என்று செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைதுறையின் சார்பில் போதைப்பொருள் எதிர்ப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் நடத்தப்பட்ட வான்சாகச நிகழ்ச்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி கொடியசைத்து துவக்கி வைத்தார்

சிவகங்கை, அக்.17-

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக மைதானத்தில் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைதுறையின் சார்பில் போதைப்பொருள் எதிர்ப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் நடத்தப்பட்ட வான்சாகச நிகழ்ச்சியினை, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்து தெரிவிக்கையில்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, மதுவிலக்கு மற்றும் போதை ஒழிப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திடும் பொருட்டு தமிழகம் முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குறிப்பாக, போதைப்பொருட்களை ஒழிக்க வேண்டும் என்ற ஒற்றை இலக்கோடு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் "போதைப் பொருட்கள் இல்லா தமிழ்நாடு" என்ற தலைப்பில் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தமிழகம் முழுவதும் சிறப்பாக மேற்கொண்டு வருகிறார்கள்.

அதன்படி, மாவட்டம் முழுவதும் போதை பொருள் தடுப்பு குறித்து, பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக இன்றைய தினம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறையின் சார்பில், போதைப் பொருட்கள் தடுப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில், போதைப்பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து, அரசு அலுவலர்கள், அரசு மகளிர் கலைக்கல்லூரி மாணவியர்கள், மன்னர் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள், தன்னார்வலர்கள் ஆகியோர் பங்கேற்ற "பாரா கிளைடிங்" வான்சாகச நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டது. இதில், "Say No To Drugs" மற்றும் "Drug Free TN" போன்ற விழிப்புணர்வு வாசகங்கள் பதிக்கப்பட்ட பாராசூட்டிகளில் மாணவ மாணவியர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் தன்னார்வலர்கள் பறந்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இவ்வகையான பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுவதற்கான நோக்கமானது, போதைப் பொருள், சமூகத்தை முற்றிலும் அழிப்பது மட்டுமல்லாமல், அனைத்து வகையான நோய்களுக்கும் அடிப்படையாக விளங்கும் போதை பொருட்களை பயன்பாட்டிலிருந்து தவிர்ப்பதும் ஆகும். எனவே, போதைப் பொருட்களை முற்றிலும் ஒழிப்பதற்கு உலக நாடுகள் ஒருங்கிணைந்து, போதைப்பொருள் இல்லாத சமூகத்தை உருவாக்கிட வேண்டும் என்பதனை கருத்தில் கொண்டுள்ளது.

குறிப்பாக, இந்தியாவின் எதிர்கால தூண்களாக விளங்கி வரும், மாணவ செல்வங்கள் வளமான சமுதாயத்தை உருவாக்குவதற்கு அடிப்படையாகவும் திகழ்ந்திட வேண்டும். சமூக பொறுப்பு உணர்வுடன் நல் வழியில் செயல்பட்டு, வீட்டிற்கும் நாட்டிற்கும் பெருமை சேர்பதை தங்களது தலையாய கடமையாக கொண்டு செயல்பட வேண்டும்.

போதை பொருள் பயன்பாடற்ற சமுதாயமாக உருவாக்குவதற்கு இளைய சமுதாயத்தினர் மற்றும் பொதுமக்கள் ஒவ்வொருவரின் பங்களிப்பினை ஏற்படுத்தி, ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்குவதற்கு ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ். செல்வசுரபி அவர்கள், உதவி ஆணையர் (ஆயம்) திரு.சிவபாலன், சிவகங்கை மற்றும் தேவகோட்டை கோட்ட ஆய அலுவலர்கள், தீயணைப்பு துறையைச் சார்ந்த அலுவலர்கள் மற்றும் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறையைச் சார்ந்த அலுவலர்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியர்கள், தன்னார்வலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## சத்தீஸ்கரில் 77 நக்சலைட்கள் சரண்

சுக்மா: அக்.17-

சத்தீஸ்கரில் நேற்று 42 பெண்கள் உட்பட 77 நக்சலைட்கள் பாதுகாப்புப் படையினர் முன்னிலையில் ஆயுதங்களை ஒப்படைத்து விட்டு சரணடைந்தனர். நக்சல் அபாயம் உள்ள மாநிலங்களில் அடுத்தாண்டு மார்ச் 31ம் தேதிக்குள் நக்சலைட்கள் ஒழிக்கப்படுவர் என மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா உறுதிபட தெரிவித்துள்ளார். இதனால் பாதுகாப்புப் படையினர் தீவிர தேடுதல் வேட்டை நடத்தி வருகின்றனர்.

இதையடுத்து நக்சலைட்கள் சரணடைவதும் அதிகரித்து வருகிறது. மகாராஷ்டிரா மாநிலம் கட்சிரோலி மாவட்டத்தில் நக்சல் தலைவர் சோனு சரண் தலைமையில், 60 பேர் சரணடைந்தனர்.

இந்நிலையில் சத்தீஸ்கர் மாநிலம் சுக்மா மாவட்டத்தில் 10 பெண்கள் உட்பட 27 நக்சலைட்கள் சிஆர்பிஎப் போலீஸ் அதிகாரிகள் முன்பு நேற்று சரணடைந்தனர். இவர்களில் பலரது தலைக்கு ரூ.50 லட்சம் வரை பரிசுகள் அறிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இதேபோல் சத்தீஸ்கரின் கான்கெர் மாவட்டத்தில் நேற்று நக்சல் கமாண்டர் ராஜ்மன் மண்டாவி தலைமையில் 32 பெண்கள் உட்பட 50 நக்சலைட்கள் எல்லை பாதுகாப்புப் படையினர் முன்பு சரணடைந்தனர். இந்நிகழ்ச்சியில் அவர்கள் 39 ஆயுதங்களையும் ஒப் படைத்தனர். பிஜப்பூர் மாவட்டம் பாய்ரம்கர் பகுதியில் இன்று காலை 120 நக்சலைட்கள் சரணடைவர் என எதிர்பார்க்கப்படுவதாக பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

## வளமும், வாய்ப்பும் அனைவருக்கும் பொதுவாக இருக்க வேண்டும்: தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி கருத்து

காரைக்குடி, அக்.17-

வளமும், வாய்ப்புகளும் அனைவருக்கும் பொதுவாக இருக்க வேண்டும் என்று ஆளுநர் ஆர்.என்.ரவி கூறினார். காரைக்குடி அழகப்பா பல்கலை.யில் பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா இருக்கை சார்பில் 'வளர்ச்சியடைந்த இந்தியாஸ்ரீ2047, நல்லாட்சியும் நிலையான வளர்ச்சிக்கு வழிகாட்டும் ஒருங்கிணைந்த மனிதநேயமும்' என்ற தலைப்பில் 2 நாள் தேசியக் கருத்தரங்கு நேற்று தொடங்கியது. துணைவேந்தர் க.ரவி வரவேற்றார்.

கருத்தரங்கைத் தொடங்கி வைத்து ஆளுநர் ஆர்.என்.ரவி பேசியதாவது: இளைஞர்கள் பெரிய கனவுகளைக் காணவும், தேசக் கட்டமைப்பில் பங்காற்றவும் அப்துல் கலாம் ஊக்கமளித்தார். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் வரி வசூலிக்கும் கருவிகளாகவும், மக்களை அச்சுறுத்தும் சாதனங்களாகவும் மாவட்ட நிர்வாகம், காவல் துறை இருந்தன. தற்போது



அந்நிலை மாறியுள்ளது. நமது ரிஷிகள், முனிவர்கள், கவிஞர்கள் தங்கள் ஞானத்தால் தலைமுறைக்கு ஏற்றபடி சூழலை மாற்றி அமைத்தனர்.

நாட்டில் 70 லட்சம் பழங்குடியினர் உள்ளனர். அவர்களில் 12 லட்சம் பேர் தமிழகத்தில் உள்ளனர். அவர்களுக்கு பலனளிக்கும் திட்டங்களைச் செயல்படுத்தியவர் பிரதமர் மோடி. உணவு உள்ளிட்ட பல்வேறு வகைகளில் வேறுபட்டாலும் தீன்தயாள் உபாத்யாயா தத்துவத்தின்படி நாம் அனைவரும் ஒரே குடும்பம்.

உலகின் 4வது பெரிய பொருளாதார நாடாக இந்தியா மாறியதற்கு ஒருங்கிணைந்த மனிதநேயமே காரணம். அதுவே, வெளியுறவுக் கொள்கையிலும் உள்ளது. வளமும், வாய்ப்புகளும் அனைவருக்கும் பொதுவாக இருக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். டெல்லியில் உள்ள இந்திய கலாச்சார மையத் தலைவர் வினய் பி.சஹஸ்ரபுத்தே, காந்திகிராம நிகர்நிலை பல்கலை.

துணைவேந்தர் பஞ்சநதம் ஆகியோர் பேசினர். பதிவாளர் செந்தில்ராஜன் நன்றி கூறினார். முன்னதாக, அப்துல் கலாம் பிறந்தநாளையொட்டி பல்கலை. வளாகத்தில் உள்ள அவரது சிலைக்கு ஆளுநர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். ஆளுநருக்கு மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, காவல் கண்காணிப்பாளர் சிவபிரசாத் ஆகியோர் பூங்கொத்து கொடுத்து வரவேற்றனர்.

## அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் உதவித்தொகை, பெறுவதற்கு தகுதியான நபர்கள் உரிய சான்றுகளுடன் வருகின்ற 17.11.2025 ஆம் தேதிக்குள் தமிழ் வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் நேரடியாக விண்ணப்பித்து பயன்பெறலாம்

சிவகங்கை, அக்.17-

தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித்துறையின் சார்பாக சீரிளமைத் திறம் கொண்ட அன்னைத் தமிழுக்கு அருந்தொண்டாற்றி வரும் அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

முதுமைக்காலத்திலும் பொருள் வறுமை, தமிழ் தொண்டர் பெருமக்களைத் தாக்கா வண்ணம் திங்கள்தோறும் ரூ.7,500/ம், மருத்துவப்படி ரூ.500/ம் என மொத்தம் ரூபாய் எட்டாயிரம் உதவித்தொகையாக வழங்கப்படுகிறது. தமிழுக்காக தம் வாழ்நாளை ஈந்துவரும் பெருமக்களுக்கு இந்த உதவித்தொகை அவர்கள் வாழுங்காலமெல்லாம் தமிழ்த் திருப்பணியில் தொய்வின்றி ஈடுபடும் வகையில் வழங்கப்பட்டு வருகிறது. தகைமைமேல் தகைமையாக, அகவை முதிர்ந்த தமிழ்ச் சான்றோர் பெருமக்களுக்கு அரசுப் பேருந்துகளில் கட்டணமில்லாப் பயணச் சலுகையும் வழங்கப்படுகிறது.

மேலும், தமிழ் காத்த தகைமை க்காக உதவித்தொகை பெற்ற தமிழறிஞர் பெருமக்களின் மறைவுக்குப் பின்னர் அவரின் வாழ்விணையர்/ திருமணமாகாத மகள்/ விதவை மகளுக்கு, அவர்தம் வாழ்நாள் முழுவதும் ரூ.2,500/ மற்றும் மருத்துவப்படி ரூ.500/ம் வழங்கப்படுகிறது.

2025-2026 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை கூட்டத்தொடரில் கடந்த 16.4.2025 அன்று நடைபெற்ற தமிழ் வளர்ச்சித்துறையின் மானியக் கோரிக்கையின் போது, மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்கள் "தமிழுக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் மறுமலர்ச்சிக்கும் தொண்டாற்றும் அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு தற்பொழுது, ஆண்டுதோறும் 100 தமிழறிஞர்கள் தெரிவு செய்யப்பட்டு உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இந்த எண்ணிக்கை ஆண்டுக்கு 150 ஆக உயர்த்தப்படும். இதற்கென தொடர் செலவினமாக ரூபாய் 48 இலட்சம் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும்" என அறிவித்தார்கள். அவ்வறிவிப்பிற்கிணங்க அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு, உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் பயன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கையினை 100 லிருந்து 150 ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

அவ்வாணையின்படி, அகவை முதிர்ந்த தமிழறிஞர் களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் அகவை முதிர்ந்த தமிழறிஞர் பெருமக்களிடமிருந்து 2025-26ஆம் ஆண்டிற்கு tamil-valarchithurai.org/agaval/ என்ற வலைதளத்தின் வாயிலாக விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

மேலும், 'மகளிர் உரிமைத் தொகை, சமூகநல பாதுகாப்பு உதவித்தொகை போன்ற தமிழ்நாடு அரசின் வேறு திட்டங்களின் வாயிலாக உதவித்தொகை அல்லது ஓய்வூதியம் பெற்று வரும் பயனாளிகள் குறிப்பிட்ட திட்டத்தின் வாயிலாக விண்ணப்பிக்க இயலாது.

அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் பயன்பெற விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் 01.01.2025 ஆம் நாளன்று 58 வயது நிறைவடைந்தவராகவும், ஆண்டு வருவாய் ரூ.1,20, 000/க்கு மிகாமலும் இருத்தல் வேண்டும் (வட்டாட்சியர் அலுவலகத்தில் இணையவழியில் பெறப்பட்ட வருமானச்சான்று இணைக்கப்படவேண்டும்).

தமிழ்ப்பணி ஆற்றியமைக்கான விவரக் குறிப்பு மற்றும் இரண்டு தமிழறிஞர்களிடமிருந்து தமிழ்ப்பணி ஆற்றி வருவதற்கான பரிந்துரைச் சான்று, ஆதார் அட்டை நகல், குடும்ப அட்டை நகல் (ஸ்மார்ட் கார்டு), மரபுரிமையர் (கணவன் / மனைவி) இருப்பின் அவரது ஆதார் அட்டை நகல் ஆகியவைகளையும் விண்ணப்பத்துடன் இணைத்திடல் வேண்டும்.

மேலும், அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் விண்ணப்பப்படிவத்தினை மண்டில / மாவட்டத் தமிழ் வளர்ச்சித் துணை/ உதவி இயக்குநர் அலுவலகத்தில் நேரிலோ அல்லது தமிழ் வளர்ச்சித்துறையின் வலைதளமான (www.tamilvalarchithurai.tn.gov.in <http://www.tamilvalar-chithurai.t n.gov.in/>) என்ற வலைத்தளத்தின் வாயிலாகவோ கட்டணமில்லாமல் பதிவிறக்கம் செய்து, நிறைவு செய்யப்பட்ட மூல விண்ணப்பத்தை நேரிலும் tamilvalarchithurai.org/agaval/ என்ற வலைதளத்தின் வாயிலாகவும் விண்ணப்பம் செய்வது கட்டயமாகும்.

அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்படுபவருக்கு முன்னர்க் கூறியதுபோல், திங்கள்தோறும் உதவித் தொகையாக ரூ.7,500/ம், மருத்துவ ப்படியாக ரூ.500/ம் அவருடைய வாழ்நாள் முழுவதும் வழங்கப்படும்.

எனவே, அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் உதவித்தொகை பெறுவதற்கு தகுதியான நபர்கள், உரிய சான்றுகளுடன் படிவத்தில் நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்களை, வருகின்ற 17.11.2025 ஆம் தேதிக்குள் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இயங்கிவரும் தமிழ் வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் நேரடியாக அளித்திடல் வேண்டும். கூடுதல் விவரங்களுக்கு www.tamilvalarc hithurai.org என்ற இணையதளத்தின் வாயிலாக அறிந்து கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

## சிவகங்கையில் இருசக்கர வாகனத்தில் சென்ற பெண்ணிடம் 10 சவரன் நகைப் பறிப்பு கொள்ளைக்கு போலீஸ் வலை வீச்சு






சிவகங்கை, அக்.17-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள கீழ்மேல்குடி பகுதியைச் சேர்ந்த முருகன் மனைவி மேனகா, காளையார் கோவில் நோக்கி நடைபெற்ற இறப்பு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தார். நம்பர் பிளேட் இல்லாத இருசக்கர வாகனத்தில் வந்த அந்த இரு நபர்கள், மேனகாவை பின்தொடர்ந்து, காட்டு குடியிருப்பு பகுதியில் திடீரென கழுத்தில் கை வைத்து சுமார் 10 சவரன் மதிப்புள்ள நகையை பறித்து தப்பி சென்றுள்ளனர்.

நகையை பறித்த தருணத்தில் திடீர் அதிர்ச்சியடைந்த மேனகா இருசக்கர வாகனத்திலிருந்து தவறி கீழே விழுந்து சிறிதளவு காயமடைந்தார்

இந்த சம்பவம் சிவகங்கை-காளையார் கோவில் சாலையில் பரபரப்பை ஏற்படுத்தி யுள்ளது.தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த சிவகங்கை நகர் போலீசார் இதை சம்பவம் குறித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மேலும், மேனகா கூறுகையில் சுமார் 50க்கும் மேற்பட்டோர் அந்த நேரத்தில் சாலையில் சென்றனர். ஆனால் ஒருவரும் நிற்காமல், உதவி செய்யாமல் சென்றுவிட்டனர். நகை பறிக்கப்பட்டதும் கீழே விழுந்தேன்,'' என வேதனை தெரிவித்துள்ளார். சிவகங்கை மாவட்டத்தில் கொலை,கொள்ளை நாளுக்கு நாள் வழிப்பறி மற்றும் நகை பறிப்பு சம்பவங்கள் அதிகரித்து வருவது குறித்து அப்பகுதி மக்கள் கடும் அதிருப்தி தெரிவித்துள்ளனர். பெண்களிடம் பட்டப் பகலில் நகைப் பறிப்புச் சம்பவம் நடந்துள்ளது பொதுமக்களிடையே அச்சத்தை ஏற்படுத் தியுள்ளது. இதனால், பலரும் தங்க நகையை தவிர்த்து கவரிங் நகையை அணியத் தொடங்கியுள்ளனர்..

## கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் "காரைக்குடியில் அமைய வேண்டும்: தொழில்வணிகக் கழகம் வலியுறுத்தல்






சிவகங்கை, அக்.17-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி தொழில் வணிகக் கழகத்தின் 17 ஆவது செயற்குழுக் கூட்டம் M.A.சிதம்பரம் அரங்கில் நடைபெற்றது. தலைவர் சாமிதிராவிடமணி தலைமையும், பொருளாளர் KN.சரவணன் முன்னிலையும் வகித்தனர். செயலாளர் Lior.S கண்ணப்பன் வரவேற்று பேசினார். "தொலைக்காட்சி நகைச்சுவை உரையாளர்" தேவகோட்டை இராமநாதன் சிறப்புரையாற்றினார். "விசாலம் சிட்பண்ட் இயக்குநர்" AR.உமாபதி, துணைத் தலைவர்கள். S.காசிவிசுவநாதன், GTS.சத்தியமூர்த்தி, KL பெரியதம்பி, சித்திரவேல், இணைச்செயலாளர்கள் AR.கந்தசாமி N. நாச்சி யப்பன், VR.இராமநாதன் (எ) மோகன், "அப்டெக்'" RM வெங்கடாசலம், உட்பட 90 உறுப்பினர்கள் பங்கேற்றனர்) தமிழக அரசின்சட்ட நீதித்துறையின் சார்பில் வருகை தந்தஉயர் நீதிமன்ற நீதிபதிகள் கொண்ட ஆய்வுக்குழுவினரின் பரிந்துரையானது, தற்போது சிவகங்கை யிலுள்ளநீதிமன்றத்தில் 80% சதவிகித வழக்குகள் காரைக்குடிபகுதியைச் சேர்ந்தவைகளாகவும், மேலும் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதாலும், அரசு விதிகளின்படி, "கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தை "யும், சார்பு (சப்கோர்ட்) நீதிமன்றத்தையும் காரைக்குடியில் நிறுவிட வேண்டும் என்பதை ஏற்று, உடனடியாக தமிழ்நாடு அரசு விரைவாக தொடங்க ஏற்பாடு செய்ய வேண்டும். என தீர்மானம் நிறைவேற்றினார்கள். 2) காரைக்குடி மாநகரு க்குள் அதிகமான கடைத் தெருக்கள் இருப்பதால், அன்றாடம் மக்கள் வருகை அதிகமாகிவதால், கழிப்பிடம், வாகன நிறுத்தம் இல்லாததால் பெரும் சிரமம் ஏற்படுகிறது. எனவே, மாநகராட்சியினால், "நவீன (பயோ கேஸ்) பிளாஸ்டிக் பெட்டிகளைக் கொண்ட கழிப்பறைகளை நகரெங்கும் அமைக்க வேண்டும்.,மேலும் "கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்" காரைக்குடி யில்அமையவேண்டும்! தொழில்வணிகக்

## மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் செய்திக் குறிப்பில் தெரிவித்ததாவது

இராமநாதபுரம், அக்.17-

திங்கள் கிழமை தோறும் மாவட்ட அரசு மருத்துவ மனையில் நடைபெற்று வந்த மாற்றுத்திறனாளி களுக்கான தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டை வழங்கும் முகாம் மாறுதல் செய்யப்பட்டு, இனிவரும் காலங்களில் வாரத்தில் புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் பின்வரும் மாற்றுத்தி றனாளிகள் வகைகள் 1.கை கால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள், 2.தொழுநோயால் பாதிக் கப்பட்ட மாற்றுத்திற னாளிகள், 3.மூளை முடக்குவா தத்தால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள், 4.குள்ளத்தன்மையுடைய மாற்றுத்திறனாளிகள், 5.தசைச்சிதைவு நோயினால் பாதிக்கப்பட்ட மாற்றுத்தி றனாளிகள், 6.அமில வீச்சினால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள், 7.பார்வையற்ற மாற்றுத்திற னாளிகள், 8.குறைபார்வை மாற்றுத்திறனாளிகள், 9.காது கோளாமை மாற்றுத்திறனாளிகள், 10.பேச்சு மற்றும் மொழித்திறன் குறைபாடு மாற்றுத்தினாளிகள், 11.அறிவுசார் குறைபாடு மாற்றுத்திறனாளிகள், 12.புறவுலக சிந்தனையற்றோர் மாற்றுத் திறனாளிகள், 13.குறிப்பிட்ட கற்றல் குறைபாடு மாற்றுத்திறனாளிகள், 14.மனநோய் மாற்றுத்தி னாளிகள், 15.நாள்பட்ட நரம்பியல் பாதிப்பு மாற்றுத்திறனாளிகள், 16.திசு பன்முகக் கடினமாதல் மாற்றுத்தினாளிகள், 17.நடுக்கு வாதம் மாற்றுத்திறனாளிகள், 18.இரத்த அழிவுச்சோகை மாற்றுத்திறனாளிகள், 19.இரத்த உறையாமை அல்லது இரத்த ஒழுகு குறைபாடு மாற்றுத்தி றனாளிகள், 20.அரிவாளணு இரத்த சோகை மாற்றுத்திறனாளிகள், 21.பல்வகை குறைபாடு மாற்றுத்திறனாளிகளுக்கு

இராமநாதபுரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அமைந்துள்ள மாவட்ட ஆரம்ப நிலை தலையீட்டு மையத்தில் காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை நடைபெறும். எனவே மருத்துவச்சான்று தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டை (ருனுஜனு) இதுவரை பெறாத மாற்றுத்திறனாளிகள் மேற்காணும் தினங்களில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர்சிம்ரன்ஜீத் சிங் காலோன் செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## இளங்கோ மாநகராட்சி பள்ளிக்கு தனியார் நிறுவனத்தின் சமூக பொறுப்பு நிதியின் கீழ் புதிய டிஜிட்டல் ஸ்மார்ட் டி.வி. வழங்கப்பட்டுள்ளது




மதுரை, அக்.17-

மதுரை மாநகராட்சி செனாய் நகர் இளங்கோ மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் சக்ரா கிராண்ட் ஹோட்டல் மற்றும் கோல் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் மூக பொறுப்பு நிதியின் கீழ் வழங்கப்பட்ட புதிய டிஜிட்டல் ஸ்மார்ட் டிவி.யின் மூலம் மாணவர்களுக்கு பயிற்சி நடைபெறுவதை மதுரை மாநகராட்சி துணை ஆணையாளர் திரு.ஜெய்னுலாப்தீன் அவர்கள் இன்று (16.10.2025) பார்வையிட்டார்கள்.

மதுரை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் 26 ஆரம்பபள்ளிகள், 14 நடுநிலைப்பள்ளிகள், 9 உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 15 மேல்நிலைப் பள்ளிகள் என மொத்தம் 64 பள்ளிகள் செயல்பட்டு வருகிறது. மதுரை மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவ. மாணவிகள் புத்தாக்கம் பெறுவதற்கு மாநகராட்சியின் சார்பில் விளையாட்டு போட்டிகள், மாவட்ட அளவில் மற்றும் மாநில நடைபெறும் பல்வேறு குறு விளையாட்டு போட்டிகள், உயர்கல்வி வழிகாட்டுதல், மற்றும் மேஜிக் ஷோ, புத்தகம் வாசிப்பு, பசுமை நடைபயணம்,ஐதராபாத் அறிவியல் மையம், இஸ்ரோ விண்வெளி ஆராய்ச்சி மையத்திற்கு சுற்றுப்பயணம் உள்ளிட்டவை தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டு வருகிறது, மேலும் தனியார் நிறுவனத்தின் சமூக பொறுப்பு நிதியின் கீழ் பள்ளிக்கூடங்கள் பல்வேறு கட்டமைப்பு வசதிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன்படி இன்று (16.10.2025) மதுரை மாநகராட்சி செனாய் நகரில் உள்ள இளங்கோ மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் சக்ரா கிராண்ட் ஹோட்டல் மற்றும் கோல் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் சமூக பொறுப்பு நிதியின் கீழ் ரூ.1,00,000 லட்சம் மதிப்பீட்டில் புதிய டிஜிட்டல் ஸ்மார்ட் டி.வியை வழங்கப்பட்டுள்ளது. இளங்கோ மாநகராட்சி பள்ளிகளில் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு இலவச மருத்துவ நுழைவு தேர்விற்கான பயிற்சி வகுப்பிற்கும் மற்றும் தினசரி பாடப்பயிற்சிக்கும் இந்த புதிய டிஜிட்டல் டி.வி பயன்படுத்தப்பட உள்ளது. மேலும் சக்ரா கிராண்ட் 'ஹோட்டல் நிறுவனம் மாநகரட்சியின் 10 பள்ளிகளில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி (RO Plant) நிறுவப்பட்டு அதன் தொடர் பராமரிப்பு சேவைகளும் அளிக்கப்பட உள்ளார்கள்.

இந்நிகழ்வில் கல்விக்குழுத் தலைவர் திரு.ரவிச்சந்திரன், கல்வி அலுவலர் திரு.ஜெய்சங்கர், ஸ்ரீ சக்ரா கோல் இந்தியா பிரைவேட் லிமிடெட் உரிமையாளர்கள் திரு.சுதாகர்அறிவழகன் பள்ளி தலைமை ஆசிரியர் திருமதி.உமாமகேஸ்வரி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## ஸ்டார் ஹெல்த் இன்சூரன்ஸ் இலவச மெகா மருத்துவ முகாம்

கோவை, அக்.17-

கோவை ஆவாரம்பாளையம் பகுதியில் உள்ள தனியார் கூட்டரங்கில் ஸ்டார் ஹெல்த் இன்சூரன்ஸ்முகவர்களுக்கும் குடும்பத்தினருக்கும் இலவச மெகா மருத்துவ முகாம் நடைபெற்றது.

இம்முகாமிற்கு சிறப்பு விருந்தினராக மேயர் ரங்கநாயகி ராமச்சந்திரன் கலந்து கொண்டு குத்து விளக்கேற்றிரிப்பன் வெட்டி துவக்கி வைத்தார்.

இம்முகாமில் 500க்கும் மேற்பட்டோர் பயனடைந்தனர். மேலும் பல முன்னணி மருத்துவ மனைகள் மற்றும் மருத்துவ நிறுவனங்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் முன்னெச்சரிக்கை மருத்துவ சேவைகள் மற்றும் நலத்திட்டங்களை இணைந்து, முகவர்களுக்கும் முன்னெடுக்க நடைபெற்றது. இதில் பொதுமருத்துவம், எலும்பியல். மகளிர் நலம், கண், பல், உடற்பயிற்சி ஒருங்கிணைந்த முகாமில், தலா ரூ.6,000 மதிப்பிலான சேவைகளை மற்றும் ஊட்டச்சத்து ஆலோசனை ஆகிய பல்வேறு பரிசோதனைகள் வழங்கினர்.

பாலாஜிபாபு பிசினஸ் ஹெட் முகவர்களின் நலனுக்காக இத்தகைய மருத்துவ முகாம்களை நடத்துவதின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, அவர் கோயம்புத்தூர் மண்டலம் இந்நிதியாண்டில் ரூ.210+ கோடி புதிய வணிகத்தையும், ரூ.143.50 கோடி மதிப்பிலான 23,800+ கிளைம்ஸ்களை தீர்வு செய்துள்ளதையும் குறிப்பிட்டார்.

ஸ்ரீராம் ரகுநந்தனன் சி ஹெஸ் ஆர் ஒ ஸ்டார் ஹெல்த் இன்சூரன்ஸ்நிறுவனத்தின் முகவர் நலனை முன்னெடுத்தல் பற்றிய முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

இந்நிகழ்வில் பிரபு ராஜமாணிக்கம் ஜோனல் ஹெட் ஊழியர்கள், முகவர்கள், மண்டல மேலாளர்கள், கிளை மேலாளர்கள் மற்றும் டாக்டர் ஹரிதா வாசுதேவன் ஆப்ரேசன் தலைமை, வாசன் ஐ கேர் டாக்டர் ஹசீப் கான் எம்டி, ஏரோ மல்டி ஸ்பெஷாலிட்டிமருத்துவமனை முகுந்த் கிளை மேலளார்கள்பழனிசாமி சரவணன் குணசேகர் டாக்டர் சௌம்யா ஜோனல் கிளைம் ஹெட் மற்றும் கோவை குழுவினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்



## பழனியில் கள்ளச்சாராயம் காய்ச்சிய பெண் உட்பட 3 பேர் குண்டர் சட்டத்தின் கீழ் கைது

திண்டுக்கல், அக்.17-

திண்டுக்கல் மாவட்டம் பழநியை அடுத்த ஆண்டிநாயக்கன் வலசு அருகே தனியார் தோட்டத்தில் கள்ள சாராயம் காய்ச்சியதாக கீரனூர் பெரிச்சிபாளையத்தை சேர்ந்த ரவி(49), அவரின் மனைவி புஷ்பா(42) ஆண்டிநாயக்கன் வலசுவை சேர்ந்த வேலுச்சாமி(62) உள்ளிட்ட 3 பேரை மதுவிலக்கு போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இந்நிலையில் இந்த 3 பேரின் குற்ற நடவடிக்கையை ஒடுக்கும் பொருட்டு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிரதீப் பரிந்துரையின் பேரில் மாவட்ட கலெக்டர் சரவணன் அவர்கள், ரவி, புஷ்பா, வேலுச்சாமி ஆகிய 3 பேரையும் குண்டர் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைக்க உத்தரவிட்டார்.

இதை தொடர்ந்து பழனி மதுவிலக்கு போலீசார் 3 பேரையும் குண்டர் சட்டத்தின் கீழ் கைது செய்து மதுரை மத்திய சிறையில் அடைத்தனர்

## தாம்பரத்தில் நமோ ஆட்டோ ஓட்டுநர்கள் நலச்சங்கம் சார்பில் ஆயுத பூஜை விழா வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது





தாம்பரம், அக்.17-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் எஸ்இடிசி பேருந்து நிலையம் அருகே நமோ ஆட்டோ ஓட்டுநர்கள் நலச்சங்கம் சார்பில் ஆயுத பூஜை விழா அமைப்பு சாரா செங்கல்பட்டு வடக்கு மாவட்ட தலைவர் டி.சிவகலை தலைமையில் நடைபெற்றது இதில் சாமிக்கு படையல் போட்டு ஆட்டோக்களுக்கு வாழைக்கன்று கட்டி வர்ண பேப்பரில் அலகரித்து சந்தனமும் பூசி குங்குமம் வைத்து அலங்கரித்து ஆயுத பூஜை விழா வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது

இதில் சிறப்பு அழைப் பாளராக செங்கல்பட்டு வடக்கு மாவட்ட தலைவர் என்.ரகு ராமன் கலந்துகொண்டு சாமி படத்திற்கு தீபாரத்தனை செய்து பூஜை துவங்கி வைத்தார் பின்னர் அதனைத் தொடர்ந்து பரிசு பொருட்கள் மற்றும் இனிப்புகள் ஆட்டோ ஓட்டுனர்களுக்கு மாவட்டத் தலைவர் என்.ரகுராமன், மாவட்ட பொதுச் செயலாளர் எஸ்.ஆர். ரத்தினம், மாவட்ட பொதுச் செயலாளர் கே.மகேஸ்வரி, நகர தலைவர் எஸ்.ராஜா, சங்க காப்பாளர் வி.குருநாதன், மாவட்டச் செயலாளர் கே.சூர்ய நாராயணன், கிழக்கு மண்டல் தலைவர்.சுதாகர், மாடம்பா க்கம் கண்ணன், கூடுவாஞ் சேரி தினேஷ், சக்ரவர்த்தி, கோபால் மற்றும் கட்சி நிர்வாகிகள் ஆயுத பூஜை பொருட்களை நிகழ்ச்சியில் வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் தலைவர் படப்பை கே.குமார், செயலாளர் ஜே.ரமேஷ், பொருளாளர் டி.சிவகலை, துணை தலைவர் பி.தாமோதரன், துணை செயலாளர் ஏ.வெங்கடேசன், சட்ட ஆலோசகர் என்.சீனிவாசன், செயற்குழு உறுப்பினர்கள் சி.எம்.சாமி, பி.சினிவாசன், எஸ்.பாஸ்கர், எஸ்.சதிஸ் குமார் மற்றும் சங்க உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியில் சிறப்பித்தனர்

## காரைக்குடி, அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் சிறுதானிய சிற்றுண்டி உணவகம் அமைப்பதற்கு, குறிப்பிட்டுள்ள தகுதிகளுடைய மகளிர் சுய உதவிக்குழுக்கள்/ கூட்டமைப்புகள்/ தொகுப்புகள் விண்ணப்பிக்கலாம்

### மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, அக்.17-

தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார திட்டத்தின் AAP-2025-26 ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ், அரசு மருத்துவமனையில் சுய உதவிக்குழுக்கள் மூலமாக சிறுதானிய சிற்றுண்டி அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடி, அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் சிறுதானிய சிற்றுண்டி உணவகம் அமைக்கப்படவுள்ளது. எனவே, சிறுதாணிய சிற்றுண்டி உணவகம் நடத்திட காரைக்குடி, அரசு மருத்துவமனையிலிருந்து 5 முதல் 8 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஊராட்சிகளைச் சார்ந்த மகளிர் சுய உதவிக்குழு க்கள்/ கூட்டமைப்புகள்/ தொகுப்புகள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

சிறுதானிய சிற்றுண்டி உணவகம் அமைக்க விண்ணப்பிக்கும் மகளிர் சுய உதவிக்குழுக்கள்/ கூட்டமைப்புகள்/ தொகுப்புகள் SHG/ PLF/Cluster – தரமதிப்பீட்டில் A or B தரம் பெற்றவராகவும், உணவகம் அமைத்து அனுபவம் பெற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

மேலும், மகளிர் சுய உதவிக்குழுக்கள் / கூட்டமைப்புகள் / தொகுப்புகளிலிருந்து குறைந்தபட்சம் 6 முதல் 8 நபர்கள் சிறுதானிய உணவகம் நடத்த தன்னார்வத் தொண்டு செய்ய தயாராகவும், உணவு தொடர்பான நிறுவனங்களை உருவாக்குவதில் அல்லது நடத்துவதில் குழு/கூட்டமைப்பு/ தொகுப்பு முன் அனுபவம் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

எனவே, சிறுதானிய சிற்றுண்டி உணவகம் அமைத்திட மேற்குறிப்பிட்டுள்ள தகுதிகளுடைய மகளிர் சுய உதவிக்குழுக்கள்/ கூட்டமைப்புகள்/ தொகுப்புகள் தங்களது சுய விண்ணப்பங்களை திட்ட இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், சிவகங்கை (ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கட்டிடம், மாவட்ட ஆட்சியர் வளாகம், வேலுநாச்சியார் விருந்தினர் மாளிகை அருகில், சிவகங்கை ஞூ 630562 என்ற முகவரியில் வருகின்ற 22.10.2025 அன்று மாலை 05.00 மணிக்குள் நேரில் சமர்ப்பித்திடல் வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, தெரிவித்துள்ளார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161